# அரையாண்டுத்தேர்வு 10th சமூகஅறிவியல் - 2019 விடைக்குறிப்புகள்

## பகுதி – I

1. அ) 1929
2. ஆ) ஷியாங் கே-ஷேக்
3. இ) 1806 ஜூலை 10
4. ஆ) சை.ஃபுதீன் கிச்லு
5. அ) காரணம், கூற்று ஆகியவை சரி
6. ஈ) இரப்பர்
7. ஈ) 7 இலட்சம்
8. ஆ) சாலை
9. ஆ) தொட்டபெட்டா
10. அ) காவிரி டெல்டா
11. அ) அமெரிக்க அரசியலமைப்பு
12. அ) ஐந்து
13. அ) ஜெனீவா
14. ஆ) (iv) தவறானது

## பகுதி – II

15. **மூவர் கூட்டு நாடுகள்:** இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா
16. **முக்கிய சர்வாதிகாரிகள்:** ஹிட்லர், முசோலினி, பிராங்கோ
17. **பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூக தீமைகள்:** சதி எனும் உடன் கட்டை ஏறுதல், குழந்தைத் திருமணம், பலதார மணம்
18. **வாரிசு இழப்பு கொள்கையால் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகள்:** சதாரா, சம்பல்பூர், ஜான்சி, நாக்பூர்
19. **தொழில் முனைவு:** தொழில் முனைவோர் தங்கள் தொழிலை பெருக்குவதற்கான செயல்முறைகளே தொழில் முனைவு எனப்படும்.
20. **இந்தியாவில் கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள்:** மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி
21. **ஜெட் காற்றோட்டம்:** வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் குறுகிய பகுதிகளில் வேகமாக நகரும் காற்றுகள் "ஜெட் காற்றுகள்" என்கிறோம்.
22. **நிலக்கரி வகைகள் மற்றும் அளவுகள்:**
    - ♣ ஆந்தரசைட்: 80% - 90% ♣ பிட்டுமினஸ்: 60% - 80%
    - ♣ பழுப்பு நிலக்கரி: 40% - 60% ♣ மரக்கரி: 40%க்கும் குறைவு
23. **தமிழ்நாட்டின் எல்லைகள்:**
    - ♣ கிழக்கு- வங்காள விரிகுடா ♣ மேற்கு - கேரளா
    - ♣ வடக்கு-ஆந்திரப் பிரதேசம் ♣ வடமேற்கு - கர்நாடகா
    - ♣ தெற்கு - இந்தியப் பெருங்கடல்
24. **உச்ச நீதிமன்ற நீதிபதியின் தகுதிகள்:**
    - ♣ இந்தியக் குடிமகனாய் இருத்தல் வேண்டும்.
    - ♣ ஐந்து ஆண்டுகள் உயர்நீதிமன்ற நீதிபதியாக பணிபுரிந்திருத்தல் வேண்டும். (அ) அவர் பத்து ஆண்டுகள் உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக செயலாற்றியிருத்தல் வேண்டும்.
25. **சார்க் உறுப்பு நாடுகள்:** ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், பூடான், இந்தியா, நேபாளம், மாலத்தீவு, பாகிஸ்தான், இலங்கை
26. **நாட்டு வருமானம்:** நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.
27. **உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் அடிப்படைக் கூறுகள்:** உணவு கிடைத்தல் என்பது விரும்பிய அளவுகளில் உணவு இருப்பு இருப்பதாகும். இது உள்நாட்டு உற்பத்தி, இருப்பு மற்றும் இறக்குமதியில் மாற்றங்கள் பற்றிய ஒரு செயல்பாடாகும்.
28. **அன்னிபெசன்ட் எழுதிய புத்தகங்கள்:** அன்னிபெசன்ட் எழுதிய புத்தகங்கள், விடுதலை பெற இந்தியா, எப்படி துயருற்றது, இந்தியா: ஒரு தேசம்
    **அன்னிபெசன்ட் தொடங்கிய செய்தித்தாள்கள்:** நியூ இந்தியா, காமன்வீல்

## பகுதி – III

29. i) 1927 ii) வடகிழக்கு பருவக்காற்று iii) காடு மற்றும் மலை மண் iv) குடியரசுத் தலைவர் v) வாங்கும் சக்தி
30. **ஜாலியன் வாலாபாக் படுகொலை:**
    - ♣ ரௌலட் சட்டத்திற்கு எதிரான போராட்டம் பஞ்சாபில் குறிப்பாக அமிர்தசரஸ் மற்றும் லாகூரில் தீவிரமடைந்தது.
    - ♣ இப்போராட்டத்திற்கு தலைமையேற்றதால் சை.ஃபுதீன் கிச்லு மற்றும் சத்தியபால் என்ற இரண்டு முக்கிய தலைவர்கள் கைத செய்யப்பட்டனர்.
    - ♣ இதனை எதிர்த்து அமிர்தசரஸில் உள்ள ஜாலியன் வாலாபாக்கில் 1919 ஏப்ரல் 13ஆம் நாள் ஒரு பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆயிரக்கணக்கான கிராம மக்கள் அங்கு கூடியிருந்தனர்.
    - ♣ இதை அறிந்த ஜெனரல் ரெஜினால்டு டயர் ஆயுதமேந்திய வீரர்களுடன் சுற்றி வளைத்தார்.
    - ♣ உயர்ந்த மதில்களுடன் அமைந்த அந்த மைதானத்துக்கு இருந்த ஒரே வாயில் பகுதியை ஆக்ரமித்த ஆயுதமேந்திய வீரர்கள் எந்தவித முன்னெச்சரிக்கையுமின்றி கண்மூடித்தனமாக தொடர்ந்து 10 மணித்துளிகளுக்கு சுட்டனர்.
    - ♣ இந்நிகழ்ச்சி ஜாலியன் வாலாபாக் படுகொலை எனப்படுகிறது.
31. **தமிழ்நாட்டின் தோட்ட வேளாண்மை பயிர்கள்:**
    1. **தேயிலை:** நீலகிரி மலைகள் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மலைகளில் தேயிலை தோட்டங்கள் காணப்படுகின்றன.
    2. **காபி:** நீலகிரி மலைகள் மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காடு மலைச்சவுகளில் காபி குறிப்பிடத்தகுந்த அளவில் பயிரிடப்படுகிறது.
    3. **இரப்பர்:** இரப்பர் தோட்டங்கள் கன்னியாகுமரியில் அதிகமாகக் காணப்படுகிறது.
    4. **முந்திரி:** கடலூர் மாவட்டத்தில் பெரும் பகுதிகளில் முந்திரி பயிரிடப்படுகின்றது.
    5. **ஏலக்காய்:** மதுரையைச் சுற்றியுள்ள மலைப்பகுதிகளில் ஏலக்காய் தோட்டங்கள் காணப்படுகின்றன.
32. **அ) வேறுபடுத்துக.**

| (i) காரிப் பருவம் | சையத் |
|---|---|
| ஜூன் முதல் செப்டம்பர் வரை | ஏப்ரல் முதல் ஜூன் வரை |
| நெல், பருத்தி, சோளம், கம்பு, உளுந்து | காய்கறிகள், பழங்கள், தினைப்பயிர்கள் |

| (ii) மேற்கு தொடர்ச்சி மலைகள் | கிழக்கு தொடர்ச்சி மலைகள் |
|---|---|
| வடக்கே நீலகிரி முதல் தெற்கே மருதமலை வரை நீண்டுள்ளது. | வட மாவட்டங்களில் அமைந்துள்ளன. |
| மிக உயர்ந்த சிகரம் தொட்டபெட்டா | மிக உயர்ந்த சிகரம் சேர்வராயன் |
| வடகிழக்கு பருவக்காற்று காலத்தில் அதிக மழை பெறுகிறது. | மாநிலத்தின் கிழக்குப் பகுதிகள் மிகக் குறைவான மழைஅளவைப் பெறுகின்றன. |

**ஆ) காரணம் கூறுக.**

- ♣ வட இந்திய ஆறுகள் இமய மலையில் பனி உறைந்த மலைகளில் உருவாகின்றன.
- ♣ இந்த ஆறுகள் பருவ மழைகளிலிருந்தும் பனி உருகுவதாலும் நீரைப் பெறுவதால் வற்றாத ஆறுகள் எனப்படுகின்றன.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**33. வியட் மின் கட்சியின் உதயம்:**

- ♣ இந்தோ – சீனாவில் இருந்த அரசியல் கட்சிகளில் வியட்நாம் தேசியக் கட்சியே முக்கியமானது.
- ♣ 1927இல் உருவாக்கப்பட்ட இக்கட்சி மக்கள் தொகையில் பணக்காரர்களையும் நடுத்தரப்பிரிவு மக்களையும் கொண்டிருந்தது.
- ♣ 1929இல் வியட்நாம் வீரர்கள் ராணுவப்புரட்சி செய்தனர்.
- ♣ இரண்டாவது உலகப்போரின் தொடக்கத்தில் பிரான்ஸ் ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்டது.
- ♣ ஹோ சி மின்னும் அவருடைய தோழர்களும் இச்சூழலையை பயன்படுத்தி வியட்நாமின் விடுதலையை முன்னெடுத்தனர்.
- ♣ 1941 ஜனவரி திங்கள் எல்லையைக் கடந்து வியட்நாம் 'வியட்நாம் விடுதலை சங்கம்' அல்லது வியட்மின் எனும் அமைப்பை நிறுவினர்.

**34. சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழ்நாட்டின் பங்கு:**

- ♣ ராஜாஜியின் தலைமையில் நடைபெற்ற ஊர்வலத்தில் நூறு தொண்டர்கள் மட்டுமே அணிவகுப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- ♣ 1930 ஏப்ரல் 13இல் திருச்சிராப்பள்ளியிருந்து தொடங்கி ஏப்ரல் 28இல் தஞ்சாவூர் மாவட்டத்தின் வேதாரண்யத்தை சென்றடைந்தது.
- ♣ இவவணிவகுப்புக்கென்றே "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது, சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்" எனும் சிறப்புப் பாடல் அணிவகுப்பில் எதிரொலித்தது.
- ♣ காவல்துறையினரின் கொடூரமான நடவடிக்கைகளை பொருட்படுத்தாமல் அணிவகுத்துச் சென்ற சத்தியாகிரகிகளுக்கு பயணித்த பாதையெங்கும் எழுச்சிமிகு வரவேற்பு அளிக்கப்பட்டது.
- ♣ ராஜாஜியின் தலைமையில் 12 தொண்டர்கள் உப்புச் சட்டத்தை மீறி உப்பை அள்ளினர்.
- ♣ உப்புச்சட்டத்தை மீறியதற்காக ராஜாஜி கைது செய்யப்பட்டார்.

**35. தீவிர வேளாண்மை பண்புகள்:**

- ♣ தீவிர வேளாண்மை எனப்படுவது இயந்திரங்கள் மற்றும் பல்வேறு நவீன யுக்திகள் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துவதாகும்.
- ♣ சிறிய நிலத்தில் பூச்சிக் கொல்லிகள், களைக்கொல்லிகள் மற்றும் இரசாயன உரங்களை அதிகமாக பயன்படுத்தி அதிகபட்ச விளைச்சலை பெறுவது இதன் நோக்கமாகும்.
- ♣ இந்த இயந்திரமயமாக்கல் மற்றும் தீவிரப்படுத்துதல் மூலம் சிறிய அளவில் வளர்க்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கையை பெரிய பண்ணைகள் மூலம் வளர்க்க வழிவகை செய்கிறது.

**வறண்ட நில வேளாண்மையின் பண்புகள்:**

- ♣ நீர்பாசன வசதி இல்லாத வறண்ட பகுதிகளில் இவ்வகையான வேளாண்முறை பின்பற்றப்பட்டு வருகிறது.
- ♣ இப்பகுதிகளில் பயிரிடப்படும் பயிர்கள் வறட்சியைத் தாங்கக் கூடியவை.
- ♣ இத்தகைய சூழ்நிலையில் விளைச்சல் சற்று குறைவாக இருக்கும்.
- ♣ பெரும்பாலான பகுதிகளில் ஆண்டிற்கு ஒரு பயிர் மட்டுமே பயிரிடப்படும்.

**36. பருத்தி நெசவாலைகள்:**

- ♣ பருத்தி நெசவாலைகள் தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க நன்கு வளர்ந்த ஒரு தொழிலகமாகும்.
- ♣ தமிழ்நாட்டின் பருத்தி ஆடைகள் உற்பத்தி செய்ய ஏறத்தாழ 3 லட்சத்து 50 ஆயிரம் விசைத்தறிகள் உள்ளன.
- ♣ இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 30 சதவீதம் ஆகும்.
- ♣ 'கோயம்புத்தூர் தமிழ்நாட்டின் மான்செஸ்டர்' என்று அழைக்கப்படுகிறது.
- ♣ கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மாவட்டங்கள் நெசவுத்தொழில் மூலம் மாநில பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பை அளிக்கின்றன. எனவே இப்பகுதி 'தமிழ்நாட்டின் ஜவுளி பள்ளத்தாக்கு' எனக் குறிப்பிடப்படுகிறது.
- ♣ கரூர் 'தமிழ்நாட்டின் நெசவுத்தலைநகரம்' என்றழைக்கப்படுகிறது.

**பட்டு நெசவாலைகள்:**

- ♣ நாட்டின் பட்டு உற்பத்தியில் தமிழ்நாடு நான்காவது இடத்தை வகிக்கிறது.
- ♣ "காஞ்சிபுரம் பட்டு" என்பது அதன் தனித்தன்மை, தரம் மற்றும் பாரம்பரிய மதிப்பு ஆகியவற்றால் உலகம் முழுவதும் அறியப்படுகிறது.
- ♣ தமிழ்நாட்டின் ஆண்டு பட்டு உற்பத்தி ஏறத்தாழ 1,200 மெட்ரிக் டன்கள் ஆகும்.
- ♣ காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகியவவை தமிழ்நாட்டின் முக்கிய பட்டு நெசவு மையங்களாகும்.

**37. சட்டமன்றத்தின் பணிகள்**

**1. சட்டமன்ற அதிகாரங்கள்**

- ♣ அரசியலமைப்பின்படி, மாநிலப் பட்டியலிலுள்ள அனைத்து துறைகள் மீதும் சட்டமன்றம் சட்டத்தை நிறைவேற்றலாம்.
- ♣ பொதுப்பட்டியலிலும் சட்டமன்றம் சட்டம் இயற்றலாம்.

**2. நிதி அதிகாரங்கள்**

- ♣ சட்டமன்றம், மாநிலத்தின் நிதி நிலையைக் கட்டுப்படுத்துகிறது.
- ♣ பண மசோதா கீழவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும்.

**3. நிர்வாகத் துறையின் மீது கட்டுப்பாடுகள்**

- ♣ சட்டமன்றம், நிர்வாகத் துறையைக் கட்டுப்படுத்துகிறது.
- ♣ அமைச்சரவையானது சட்டமன்றத்திற்குப் பொறுப்பானது.
- ♣ சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு, அமைச்சர்கள் பதிலளிக்க வேண்டும்.

**4. பரந்த அதிகாரங்கள்**

- ♣ சட்டமன்றம், ஈரவைகளைப் பெற்றிருக்கும்பொழுது, மேலவையைக் காட்டிலும் சட்டமன்றகீழவை அதிக அதிகாரங்களுடன் விளங்குகிறது.
- ♣ சட்டமன்றப் பேரவைமாநில நிதிநிலையை முற்றிலும் கட்டுப்படுத்துகிறது.
- ♣ மேலவை நிதி சார்ந்த நடவடிக்கையில் வாக்களிக்க முடியாது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**39. பிரிக்ஸ் கூட்டமைப்பு உருவாவதற்கான காரணங்கள்:**

- ♣ உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு ஒரு மாற்றாகவும், அமெரிக்க மேலாதிக்கத்திற்குப் போட்டியாகவும் பிரிக்ஸ் நாடுகள் கூட்டமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.
- ♣ உறுப்பு நாடுகளிடையே பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றவும், சொந்த மற்றும் சுயமாக நிருபிக்கும் விதமாக இக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

**பிரிக்ஸின் நோக்கங்கள்**

- ♣ பிராந்திய வளர்ச்சியை அடைவது
- ♣ வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் இடையே பாலமாக செயல்படுவது
- ♣ மனித மேம்பாட்டிற்கு மிகப்பரந்த அளவில் பங்களிப்பு செய்தல்
- ♣ அதிக சமத்துவம் மற்றும் நியாயமான உலகத்தை ஏற்படுத்துதல்

**39. MNCயின் நன்மைகள்**

- ♣ பன்னாட்டு நிறுவனங்கள் குறைந்தவிலையில் பொருட்களை தரமாகவும் மற்றும் பரிவர்த்தனை செலவு இல்லாமலும் உற்பத்தி செய்கிறது .
- ♣ பன்னாட்டு நிறுவனங்கள் விலைகளை குறைப்பதால் உலகளாவிய நுகர்வோரின் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது.
- ♣ பன்னாட்டு நிறுவனங்கள் வரி மாறுபாட்டை பயன்படுத்திக் கொள்ள முடியும்.
- ♣ பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளூர் பொருளாதாரத்தில் வேலை வாய்ப்பினை ஊக்குவிக்கிறது.

**MNCயின் தீமைகள்**

- ♣ பன்னாட்டு நிறுவனங்கள் முற்றுரிமையை சில தயாரிப்புகளுக்கு வளர்ப்பதற்கான ஒரு வழியாகும்.
- ♣ பன்னாட்டு நிறுவனங்களினால் சுற்று சூழலில் தீங்கினை உருவாக்க வாய்ப்புள்ளது.
- ♣ ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பன்னாட்டு நிறுவனத்தின் அறிமுகம் சிறிய உள்ளூர் வணிக வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.

**40. பொருளாதார முன்னேற்றத்தில் வரி விதிப்பின் பங்கு**

**1. வளங்களைத் திரட்டுதல்**

- ♣ வரிவிதிப்பு அரசாங்கத்திற்கு கணிசமான அளவிற்கு வருவாய் திரட்டுவதற்கு உதவுகிறது.
- ♣ குறிப்பாக நேர்முக வரிமுறையான தனிநபர் வருமானவரி, நிறுவனவரி மற்றும் மறைமுக வரிகளான ஆயத்தீர்வை, சுங்கவரி ஆகியவற்றின் மூலமாக வரி வருவாய் திரட்டப்படுகிறது.

**2. வருமான ஏற்றதாழ்வுகளை குறைத்தல்**

- ♣ வரியின் மூலம் சமத்துவமுறையை உருவாக்கலாம்.
- ♣ குறிப்பாக, நேர்முக வரியில் வளர்வீத வரி முறை பின்பற்றப்படுகிறது.

**3. சமூக நலன்**

- ♣ வரி விதிப்பு சமூக நலனை உருவாக்குகிறது.
- ♣ சில விரும்பத்தகாத பொருட்களான மதுபானங்கள் போன்ற பொருட்களின் மீது அதிகமாக வரி விதிப்பதன் மூலம் சமூக நலன் பாதுகாக்கப்படுகிறது.

**4. அந்நியச் செலாவணி**

- ♣ வரிவிதிப்பு ஏற்றுமதியை ஊக்குவிப்பதுடன் இறக்குமதியைத் தடுக்கிறது.
- ♣ பொதுவாக, வளரும் நாடுகள் மற்றும் வளர்ந்த நாடுகளும் ஏற்றுமதி பொருட்களுக்கு வரிகளை விதிப்பதில்லை.

**5. வட்டார முன்னேற்றம்**

- ♣ வட்டார வளர்ச்சியில் வரி விதிப்பு முக்கியப் பங்கினை வகிக்கிறது.
- ♣ பின் தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்கள் அமைப்பதற்காக வரிச் சலுகையையும், வரி விலக்குகளையும் அளிப்பதன் மூலம், அப்பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு வணிக நிறுவனங்களைத் தூண்டுகிறது.

**6. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல்**

- ♣ வரி என்பது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் கருவிகளுள் ஒன்றாக பயன்படுத்தப்படுகிறது.

**41. 1900 முதல் 1940 வரை நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள்**






Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

42. **இந்திய வரைபடம்**




**பகுதி – IV**

**43. சங்கத்தின் செயல்பாடுகள்**

- ♣ 1920-1925 ஆகிய ஆண்டுகளிடையே சர்வதேச சங்கம் பல சிக்கல்களைத் தீர்த்து வைக்க அழைக்கப்பட்டது. மூன்று பிரச்சனைகளைத் தீர்த்துவைப்பதில் சங்கம் வெற்றிபெற்றது.
- ♣ 1920ஆம் ஆண்டில் பின்லாந்தின் மேற்குக் கடற்கரைக்கும் சுவீடனின் கிழக்குக் கடற்கரைக்கும் இடையில் அமைந்திருந்த ஆலேண்டு தீவுகள் யாருக்குச் சொந்தம் என்பதில் பின்லாந்திற்கே உரியது என தீர்ப்பளித்தது.
- ♣ 1921ல் போலந்திற்கும் ஜெர்மனிக்குமிடையே மேலை சைலீசியம் பகுதியில் எல்லைப் பிரச்சனை ஏற்பட்டு, பிரச்சனையைத் வெற்றிகரமாகத் தீர்த்துவைத்தது.
- ♣ மூன்றாவது பிரச்சனை கிரீஸ் பல்கேரியாவின் மீது படையெடுத்தபோது சர்வதேசசங்கம் போர் நிறுத்தம் செய்ய உத்தரவிட்டது.

**தோல்விக்கான காரணங்கள்**

- ♣ சர்வதேச சங்கம் முதல் உலகப்போரில் வெற்றி பெற்ற நாடுகளின் ஐரோப்பிய அரசியல் மையமாக மாறியது.
- ♣ அரசியல் பிரச்சனைகளில் சங்கம் எடுக்கும் முடிவுகளுக்கு உறுப்பினர்கள் அனைவரின் ஏகோபித்த ஆதரவு இல்லாமல்போனது.
- ♣ சங்கத்திற்கென்று ராணுவம் இல்லை என்பதால் தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த இயலவில்லை.
- ♣ அமைதிக்கான இவ்வமைப்பை உருவாக்கியவர்கள் தேசியவாதத்தின் உள்ளார்ந்த ஆற்றலை உணர்ந்திருக்கவில்லை.
- ♣ சர்வாதிகாரிகளால் தலைமையேற்கப்பட்ட இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகள் சங்கத்தின் ஆணைகளுக்குக் கட்டுப்பட மறுத்தல், அமெரிக்கா சங்கத்தில் உறுப்பினராக இல்லாததும் தோல்விக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.

**(அல்லது)**

**பெரியாரின் சுயமரியாதை இயக்கம்:**

- ♣ சுயமரியாதை இயக்கம் அன்று நிலவிய சமூக, அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளில் இருந்த சீர்கேடுகளை விமர்சனம் செய்ததோடு தமிழ்நாட்டில் பிராமணர் அல்லாதவர்களின் மேம்பாட்டிற்கான திட்டத்தையும் அறிமுகம் செய்தது.
- ♣ பெண்களின் தாழ்வான நிலைக்கு எழுத்தறிவின்மையே காரணம் என அறிவத்த அவ்வியக்கம் அனைவருக்கும் இலவச கட்டாய இலவசக்கல்வியை அறிமுகம் செய்தது.
- ♣ பெரியார் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்த பெண்கள், பெண்கள் விடுதலை, பாலின சமத்துவம், பாலின உணர்வுகள், மேம்படுத்துதல் போன்றவற்றை விவரித்தார்.
- ♣ முத்துலட்சுமி அம்மையார், நாகம்மை, கண்ணம்மா, நீலாவதி, மூவலூர் இராமாமிர்தம், ருக்மணி அம்மாள், அலமேலு மங்கை தாயாரம்மாள், நீலாம்பிகை மற்றும் சிவகாமி சிதம்பரனார் ஆகியோர் இவர்களில் முக்கியமானவர்.
- ♣ சுயமரியாதை இயக்கம் பிராமணர் அல்லாத இந்துக்களின் நலன்களுக்காக மட்டுமல்லாமல் இஸ்லாமியர்களின் நலனுக்காகவும் போராடியது.

**44. இந்திய வரைபடம்**

